75—

உறைவிடப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்

* ***23132*** **திரு. வி. ரவிச்சந்திரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பலியாபுரம் தொகுதி, வண்ணாடு கிணத்தூர் அரசு உறைவிடப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சிக் காலத்தில், எனது உப்பிலியாபுரம் தொகுதியில் உள்ள அச்சன் விளையில் உள்ள வண்ணாடு கிணத்தூரில் உண்டு உறைவிடப் பள்ளி உள்ளது. அதை நடுநிலைப் பள்ளியாக மாற்ற வேண்டும் என்று இங்கே கேள்வியைக் கேட்டுள்ளேன். இருபது கிலோ மீட்டர் தூரம் வரையில் நடுநிலைப் பள்ளியே இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து அங்கு நடுநிலைப் பள்ளியை ஏற்படுத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், உப்பிலியாபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வண்ணாடு கிணத்தூர் அரசு உண்டு உறைவிடப் பள்ளியில் நடப்பாண்டில் 44 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். வண்ணாடு கிணத்தூர் உண்டு உறைவிடப் பள்ளிக்கு அருகாமையில் சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில் இத்துறையைச் சேர்ந்த நடுநிலைப் பள்ளியொன்று செம்புளிச்சான்பட்டியில் இயங்கி வருகிறது. மேற்படி பள்ளியில் 147 மாணவ மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். வண்ணாடு கிணத்தூர் உண்டு உறைவிடப் பள்ளியில்

1996 பிப்ரவரி 20]

குறைந்த அளவில் மாணவர்கள் இருப்பதாலும், மிக அருகாமையில் 4 கிலோ மீட்டர் தூரத்தில் செம்புளிச்சான்பட்டியில் ஒரு நடுநிலைப்பள்ளி இயங்கி வருவதாலும் இந்த உறைவிடப் பள்ளியை நடுநிலைப்பள்ளியாக உயர்த்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என திருச்சி மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தெரிவித்துள்ளார்கள்.

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிணத்தூருக்கும் செம்புளிச்சான்பட்டிக்கும் சுமார் பத்து கிலோமீட்டர் தூரம் உள்ளது. அதுவும் மலைப்பாதையாக இருப்பதால் அங்கு நடந்து சென்று படிப்பது இயலாத காரியமாக இருக்கிறது. மீண்டும் பரிசீலனை செய்து அங்கு நடுநிலைப்பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர் காலத்தில் போதுமான அளவிற்கு மாணவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்து வருமானால் பரிசீலிக்கலாம் என தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 76, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

76—

தெரு விளக்கு அமைத்தல்

* ***46379*** *திருமதி ப. சரஸ்வதி:*

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலைத் தொகுதி, மோகனூர் ஒன்றியம், பரமத்தி ஒன்றியம், கபிலர்மலை ஒன்றியம் ஆகிய மூன்று ஒன்றியங்களில் உள்ள ஆதிதிராவிடர்கள் குடியிருப்புகளில் எத்தனை குடியிருப்புகளுக்கு தெரு விளக்கு அமைக்கக்கோரி முறையீடுகள் வந்துள்ளன?

(ஆ) அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,